**14.11.2024**

**MCOP.No.47/2020**

**ம.சா.2 : தமிழ்செல்வி**

<u>**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

1) 1ம் மனுதாரர் என்னுடைய மாமனார், 2 முதல் 4 வரை மனுதாரர்கள் என்னுடைய கணவருடன் உடன் பிறந்த சகோதரிகள், 5ம் மனுதாரர் என் கணவர் என்றால் சரிதான். என் கணவரும், நானும் விபத்து சமயத்தில் வீட்டில் தான் இருந்தோம். அதனால் விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் மாமியார் நின்று கொண்டு இருந்த டாடா ஏஸ் வாகனத்தில் தான் காய்கறி வாங்கிகொண்டு இருந்தார்.

2) அந்த வண்டியின் மீது தான் இன்னொரு வண்டி மோதியதில் தான் என் மாமியார் மீது மோதிவிட்டது. என் மாமியார் மீது மோதிய வண்டியின் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் இந்த விபத்து சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி எதுவும் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) அந்த சாட்சியத்தில் ஒரு வாகனம் தான் வந்து மோதியதாக சொல்லியுள்ளேன். அந்த வண்டி எண் TN77 3532. என் மாமியார் காய்கறி தான் வாங்கிகொண்டு சரியாக தான் வந்தார். எனவே எங்களை பொறுத்து வரை 2, 3 நபர்கள் சம்பிரதாய நபர்கள் என்பதால் என் மாமியாரின் இறப்பிற்காக நஷ்டயீட்டை என் மாமியார் மீது

மோதிய வாகனம் தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த விபத்தில் நேரில் பார்க்கவில்லை என்றும், இந்த விபத்தில் இறந்தது என் மாமியார் என்பதால் நேரில் பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**